**வரையறுத்த தெதுறு ஓயா மினி கைட்றோபவர் (தனியார்) கம்பனி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுத்த தெதுறு ஓயா மினி கைட்றோபவர் (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிரத்து கம்பனி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகவுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது

அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களிற்கான குறிப்புரைகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான இங்கை கணக்காய்வு நியமம் LKAS 16 இன் 73(இ) ஆம் பந்தியின் பிரகாரம், கம்பனியானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு வகுதிக்காகவும் பயன்படுத்தப்பட்ட பயன்பாட்டுக் காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம் வெளிப்படுத்தப்பட வேண்டும். | அடுத்த ஆண்டிலிருந்து இயந்திரம் மற்றும் உபகரணங்கள், எரிவாயு மற்றும் நீர் சக்கரங்கள் மற்றும் மின்சக்தி பொறி கட்டிடங்கள் என்பவற்றின் பயன்பாட்டுக் காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு நியமத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

எவ்வாறாயினும், கம்பனியானது இயந்திரம் மற்றும் உபகரணங்கள், எரிவாயு மற்றும் நீர் சக்கரங்கள் மற்றும் மின்சக்தி பொறி கட்டிடங்கள் என்பவற்றின் பயன்பாட்டுக் காலம் அல்லது பெறுமானத்தேய்வு வீதம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 முறையற்ற மதிப்பாய்வு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 ஆம் ஆண்டிற்கான வருமான வரிக்கான ஏற்பாடு ரூபா 9,952,579 ஆக இருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், வருமான வரிக் கணிப்பீடு மற்றும் அதன் திருத்தங்கள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மேற்குறித்த ஏற்பாடுகளின் உண்மைத் தனைமையை மெய்மையாய்வு செய்ய இயலாதிருந்தது. | வரையறுத்த தெதுறு ஓயா மினி கைட்றோபவர் (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் வரிக்கு முன்னரான இலாபத்திலிருந்து 24 சதவீத வருமான வரி ஏற்பாடுகளுடன் இறுதியாக்கப்பட்டதுடன் இந்த ஏற்பாடு கம்பனி தொடங்கியதில் இருந்து இதுவரை நிதிக்கூற்றுக்களின் இறுதியாக்கலிற்காக முறையான வரிக் கணிப்பீடு செய்யப்பட்டது. தற்போது வருமான வரி கணிப்பீடு தொடங்கியதிலிருந்து இறுதியாக்கல் செயற்பாட்டின் கீழும் வருமான வரி அறிக்கை கோவைப்படுத்தலிற்கும் இதற்கு இணையொத்ததாக உள்ளது. | உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

### 1.6 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கம்பனியானது மீளாய்வாண்டில் ரூபா 14,217,134 தொகையான செலுத்த வேண்டிய இறையிலாதன கட்டணம் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறையிலாதன கட்டணம் நீர்ப்பாசன திணைக்களத்துடனான MOU இற்கமைய உடன்பட்ட 15% இல் அடிப்படையாகக் கொண்டது. | மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். . |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவு | முறையாக பூர்த்தியாக்கக்பட்ட பட்டியலுடன் சேர்த்து வேறு தேவையான ஆவணங்கள் வரி மதிப்பீட்டு ஆண்டின் இறுதிக்கு பின்னர் நவம்பர் 30 இல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது 2022 யூலை 21 வரை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு 2020/2021 வரி மதிப் பீட்டு ஆண்டிற்கான வருமான வரி அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கவில் லை | தற்போது வருமான வரி கணிப்பீடு தொடங்கியதிலிருந்து இறுதியாக்கல் செயற்பாட்டின் கீழும் வருமான வரி அற்கைகள் கோவைப்படுத்தலிற்கும் இதற்கு இணையொத்ததாக உள்ளது. | உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்துடன் இணங்கியொழுக வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செறற்பம்டு விளைவு ரூபா 41,469,078 ஆன இலாமாக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 3,435,873 ஆகும். ஆகவே, நிதிசார் விளைவில் ரூபா 44,904,951 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. ரூபா 94,780,891 ஆல் மின்சக்தி உருவாக்க தொடங்கியமை மற்றும் மின்பொறி உருவாக்கத்திலான வருமானம் என்பனவே இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக உள்ளது.

## 3. செற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| கம்பனியானது 2021 ஆம்ஆண்டில் 1.3 ஆஏ கூட்டுவதற்கு நடைபெற்ற தெதுறு ஓயா மினி கைட்றோபவர் பொறியில் திறப்பு விழாவிற்காக ரூபா 5,345,118 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. | கணக்காய்வு குழு கூட்டத்தில் விளக்கப்பட்டவாறு இந்த திறப்பு விழா செயற்திட்டம் பூர்த்தியாக்கல் காலத்தில் நிலவிய அத்தியாவசிய விடயமாக உள்ளது. | செலவினங்களை சிக்கனமாகவும் ஆக்கபூர்வமாகவும் முகாமை செய்யப்பட வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| பதவியணி ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுகள் என்பவற்றிற்காக கம்பனியால் ஆட்சேர்ப்புத் திட்டமொன்று (SOR) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு குழுவிற்கு விளக்கப்பட்டவாறு பிரயோகக்ப்படடிருக்கவில்லை. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் ஆட்சேர்ப்புத் திட்டம் (SOR) தயாரித்து அனுமதி பெறவேண்டும். |

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கமைய நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் வரைவு செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து அனுமதிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2022 ஏப்ரல் 05 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2021/12/31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி 23 நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

### 4.2 வருடாந்த அறிக்கை, செயல்நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2016 இலிருந்து வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை. | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு மேற்படி செயற்பாட்டிற்கு மின்சக்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ii) | கம்பனியானது 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | **செயல்நடவடிக்கை திட்டம்** செயல் நடவடிக்கை திட்டம் இறுதியாக்கல் செயற்பாட்டில் உள்ளது. | -மேற்படி- |
| | | **பாதீடு** 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு ஏற்கனவே பூர்த்தி யாக்கப்பட்டிருந்ததுடன் உடமையான கம்பனியின் BOD ஆல் அனுமதிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| சகல நிறுவனங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மீது ஐக்கிய நாடுகளின் ''2030 நிகழ்ச்சி'' நிரலின் பிரகாரம், அதன் நோக்கெல்லையின் கீழ் இலக்குகள் மற்றும் செயற்பாடுகளின் அமுலாக்கலில் பங்களிப்பு செய்ய வேண்டும். ஆனால், அடைய வேண்டிய உரிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள், அந்த நோக்கங்கள் அடைவதிலுள்ள இடைவெளி அதேபோல முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் என்பன இனங்காணப் பட்டிருக்கவில்லை. | இந்த சிறந்த நடைமுறை பின்பற்றப்படுவதுடன் SDGஇன் இலக்கு இனங்காணப்படும். | கம்பனி நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மீது ஐக்கிய நாடுகளின் ''2030 நிகழ்ச்சி'' நிரலுடன் இனங்கியொழுக வேண்டும். |